Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Tamilnadu Association For The Rights of All Types of Differently Abled and Caregivers - TARATDAC
Contact :
98413 59935



# கொலை வழக்கில் நிபந்தனை ஜாமினில் காவல் நிலையத்தில் கையெழுத்திடாமல் தலைமறைவாக இருந்த பிரபல ரவுடி ஆல்வின்

## கோவையில் பிடிக்க முயன்ற காவலர்களை வெட்டிவிட்டு தப்பிக்க முயன்றவரை துப்பாக்கியால் சுட்டு பிடித்த போலீசார்





சென்னை, 22 செப் 2024: கோவையில் காவலர்களை தாக்கிவிட்டு தப்பி ஓடிய ரவுடியை போலீசார் துப்பாக்கியால் சுட்டுப் பிடித்தனர்.

கோவையில் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 12-ந் தேதி பிரபல ரவுடியான சத்தியாபாண்டி என்பவரை ஒரு கும்பல் ஓட ஓட விரட்டி துப்பாக்கியால் சுட்டு கொன்றது. இந்த சம்பவம் தொடர்பாக ரேஸ்கோர்ஸ் போலீசார் வழக்குப்பதிவு செய்து சஞ்சய் ராஜா, கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் வடசேரி அடுத்த வாத்தியார் விளையை சேர்ந்த பிரபல ரவுடியான ஆல்வின் உள்பட 5 பேரை கைது செய்தனர். பின்னர் அவர்களை கோர்ட்டில் ஆஜர்படுத்தி ஜெயிலில் அடைத்தனர்.

இந்த நிலையில் ஜெயிலில் இருந்த ஆல்வின் கடந்த சில மாதங்களுக்கு முன்பு நிபந்தனை ஜாமினில் வெளியில் வந்தார். ஜாமினில் வெளியில் வந்த பின்னர் அவர் கையெழுத்திடாமல் தலைமறைவாக இருந்தார். இதுதொடர்பான வழக்கு கோவை ஜே.எம்.3 கோர்ட்டில் நடந்து வருகிறது. இந்த வழக்கில் ஆல்வினை நேரில் ஆஜராகுமாறு கோர்ட்டு உத்தரவிட்டது. ஆனால் அவர் நீண்ட காலமாக கோர்ட்டில் ஆஜராகாமல் இருந்து வந்தார். இதையடுத்து ரவுடி ஆல்வினை பிடிக்க கோர்ட்டு பிடிவாரண்டு பிறப்பித்தது. இதனை தொடர்ந்து மாநகர போலீஸ் கமிஷனர் பாலகிருஷ்ணன் உத்தரவின் பேரில் ரவுடி ஆல்வினை பிடிக்க ரேஸ்கோர்ஸ் சப்-இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் தலைமையில் ஏட்டுகள் சந்திரசேகர், ராஜ்குமார், சசி ஆகியோர் அடங்கிய தனிப்படை அமைக்கப்பட்டது.தனிப் படையினர், ரவுடி ஆல்வினை பல்வேறு இடங்களிலும் தேடி வந்தனர்.

இந்த நிலையில் ரவுடி ஆல்வின் கோவை கொடிசியா மைதான பகுதியில் பதுங்கி இருப்பதாக இன்று அதிகாலை தனிப்படை போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. தகவலின் பேரில், சப்-இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். பின்னர், ரவுடி ஆல்வின் இருக்கும் இடத்தை போலீசார் சுற்றி வளைத்தனர். அவரை போலீசார் தங்களிடம் சரண் அடையுமாறு தெரிவித்தனர். போலீசார் தன்னை சுற்றி வளைத்ததை அறிந்ததும் ரவுடி ஆல்வின் அங்கிருந்து தப்ப முயன்றார். மேலும் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து, தன் அருகே வந்தால் உங்களை கத்தியால் வெட்டி விடுவேன் என மிரட்டினார்.அப்போது ஏட்டு ராஜ்குமார், ரவுடி ஆல்வினின் அருகே சென்று அவரை பிடிக்க முயன்றார். இதனால் ஆத்திரம் அடைந்த ரவுடி தான் வைத்திருந்த கத்தியால் போலீஸ்காரரை வெட்டினார். இதில் பலத்த காயம் அடைந்த அவர் அப்படியே தரையில் விழுந்தார்.

ரவுடி ஆல்வின் அங்கிருந்து ஓட முயன்றார். இதையடுத்து, சப்-இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன், பாதுகாப்புக்காக, தான் வைத்திருந்த துப்பாக்கியால் ரவுடி ஆல்வினின் கால் முட்டிகளில் சுட்டார். இதில் அவரது 2 கால் முட்டிகளிலும் குண்டு பாய்ந்து, ரத்தம் வெளியேறியது. வலியால் அலறி துடித்த ரவுடி ஆல்வின், ஓட முடியாமல் அங்கேயே தரையில் விழுந்தார். இதையடுத்து போலீசார் விரைந்து சென்று அவரை கைது செய்தனர். மேலும் அவரிடம் இருந்த கத்தி உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களை பறிமுதல் செய்தனர். தொடர்ந்து காலில் குண்டுகள் பாய்ந்து காயம் அடைந்த ரவுடி ஆல்வினை காரில் ஏற்றி கோவை அரசு ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்றனர். அங்கு அவருக்கு காலில் பாய்ந்த குண்டுகளை அகற்றி டாக்டர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

சிகிச்சை முடிந்து, குணமாகியதும், அவரிடம் விசாரணை நடத்துவதற்கு போலீசார் திட்டமிட்டுள்ளனர். ரவுடி தாக்கியதில் காயம் அடைந்த ஏட்டு ராஜ்குமார் கோவை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். அவரை போலீஸ் உயர் அதிகாரிகள் சந்தித்து நலம் விசாரித்தனர்.இதற்கிடையே ரவுடி சுட்டுபிடிக்கப்பட்ட கொடிசியா மைதான பகுதியில் துணை கமிஷனர் ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். போலீசார் துப்பாக்கியால் சுட்டுபிடித்த ரவுடி ஆல்வின் மீது 3 கொலை வழக்குகள், 4 கொலை முயற்சிகள் வழக்குகள் உள்பட மொத்தம் 13 வழக்குகள் உள்ளது குறிப்பிடத்தக்கது. கோவையில் பிரபல ரவுடியை, போலீசார் துப்பாக்கியால் சுட்டுபிடித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இந்திய கடலோர காவல்படை சார்பில் சென்னை மெரினா, எலியட்ஸ் கடற்கரைகளில் மாபெரும் தூய்மை இயக்கம்

## கடலோரக் காவல்படை கிழக்குப் பிராந்தியத் தலைவர், கடல்சார் சுற்றுச்சூழலை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்



சென்னை, 22 செப் 2024: இந்தியக் கடலோரக் காவல்படை இன்று சர்வதேச கடலோர தூய்மை தினத்தை ஒட்டி, சென்னையில் மெரினா மற்றும் எலியட்ஸ் கடற்கரைகளில் மாபெரும் கடலோர தூய்மை இயக்கத்தை நடத்தியது.

கடலோரக் காவல்படை கிழக்கு மண்டல தலைவர் ஐஜி டோனி மைக்கேல் இன்று காலை மெரினா கடற்கரையில் தூய்மைப்படுத்தும் இயக்கத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். அனைத்து உயிரினங்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வுக்கு கடல்சார் சுற்றுச்சூழலை பாதுகாப்பது இன்றியமையாதது என்று அப்போது அவர் குறிப்பிட்டார். உணவு சங்கிலியில் கடல்சார் சுற்றுச்சூழல் முக்கிய பங்கு வகிப்பதால், கடலில் பிளாஸ்டிக் போன்ற மாசுபடுத்தும் பொருட்கள் சென்றடைவதை தடுப்பது குறித்த விழிப்புணர்வின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

கடற்கரைகளிலிருந்து குப்பைகளை அகற்றுவதில் தன்னார்வலர்களின் முயற்சிகள் குறித்து மகிழ்ச்சி தெரிவித்த கடலோர காவல்படை கிழக்கு மண்டல தலைவர், மத்திய, மாநில மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் வழங்கிய ஆதரவைப் பாராட்டினார். இந்திய கடலோரக் காவல்படைக்கு மத்திய அரசால் ஒப்படைக்கப்பட்ட அடிப்படைக் கடமைகளில் ஒரு பகுதியான கடல் சூழலைப் பாதுகாப்பதில் அது உறுதியாக உள்ளது என்று அவர் கூறினார். கிழக்கு பிராந்தியத்தில் உள்ள இந்தியக் கடலோரக் காவல்படையின் அனைத்துக் கரையோர நிலையங்கள், பிரிவுகள், நிறுவனங்கள் மற்றும் கப்பல்கள் இப்பணியில் முனைப்புடன் ஈடுபடும் என்றும், கடலோரங்களைப் பாதுகாப்பதில் பொதுமக்கள், குறிப்பாக கடலோர மீனவ சமூகமானது ஊக்கத்துடன் பங்களிப்பை வழங்குவதை தொடர்ந்து ஊக்குவிக்கும் என்றும் திரு டோனி மைக்கேல் உறுதியளித்தார்.

கடற்கரை தூய்மை இயக்கத்தில், பள்ளி, கல்லூரிகள், தொழில்துறை நிறுவனங்கள் உட்பட மத்திய மாநில அரசு அமைப்புகள் என இருபது நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 900 தன்னார்வலர்கள் காலையில், மழையையும் பொருட்படுத்தாமல் கலந்து கொண்டனர். இதன் விளைவாக இவ்விரு கடற்கரைகளில் இருந்து பிளாஸ்டிக் உட்பட சுமார் 450 கிலோ கழிவுகள் சேகரிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட கழிவுகள் கடலோர காவல்படை அதிகாரிகளால் பகுப்பாய்வுக்காக ஆவணப்படுத்தப்பட்டன. இதனால் கிடைக்கும் தரவுகள் மூலம் எதிர்காலத்தில் குறைந்தபட்ச கழிவுகள் மட்டுமே கடலுக்குள் நுழைவதை உறுதிசெய்வதற்கான தடுப்பு உத்திகளை உருவாக்க முடியும்.

பெருநகர சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், சென்னை துறைமுகம், மத்திய தொழில் பாதுகாப்பு படை சிஐஎஸ்எஃப், தமிழ்நாடு காவல்துறை, இந்தியன் ஆயில், தேசிய மாணவர் படை (என்சிசி), நாட்டு நலப்பணித்திட்டம் (என்எஸ்எஸ்), என்ஃபீல்டு உள்ளிட்ட தொழில் நிறுவனங்கள், ட்ரீ பவுண்டேஷன் போன்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட பல முகமைகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டன.

கடல்கள் மற்றும் பிற கடல்சார் நீர்நிலைகளை பாதுகாப்பது மற்றும் சுற்றுச்சூழலுக்கு சேதம் ஏற்படுவதைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மூன்றாவது சனிக்கிழமையன்று சர்வதேச கடலோர தூய்மை தினம் கொண்டாடப்படுகிறது. பெருகிவரும் மக்கள்தொகை மற்றும் வணிக நடவடிக்கைகளால் பிளாஸ்டிக் உள்ளிட்ட பலவகை கழிவுகள் சென்றடையும் இடமாக கடல்கள் மாறிவிட்டதாக கூறப்படுகிறது. பிளாஸ்டிக்குகள் (நெகிழிகள்) நீர்நிலைகளை அடைந்த பிறகு விரைவாக சிதைவதில்லை, ஆனால் அவை நாளடைவில் சிறிய துகள்களாக மாறி கடல் சூழலுக்குள் ஊடுருவி, உணவு சுழற்சியில் நுழைவதன் மூலம் மனிதர்களை பாதிக்கிறது என்று அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

எத்தகைய கடல் மாசுபாட்டையும் கையாள்வதற்கான ஒருங்கிணைப்பு அமைப்பாக, இந்திய கடலோர காவல்படை உள்ளது. அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் கடல் சூழலின் பாதுகாப்பை உறுதி செய்வதில் அது தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

கடலோரக் காவல்படையின் கிழக்குப் பகுதி சார்பில், சென்னையைத் தவிர, தூத்துக்குடி, புதுச்சேரி, காரைக்கால், மண்டபம், விசாகப்பட்டினம், கிருஷ்ணாப்பட்டினம் ஆகிய இடங்களில் உள்ள அலுவலகங்களும் இதேபோன்ற கடலோர தூய்மை பணிகளை ஒருங்கிணைத்து நடத்தின.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

## 'கோழிப்பண்ணை செல்லத்துரை' உணர்வுப்பூர்வமான காட்சிகளைப் பக்குவமாக கையாண்டு தனது முதிர்ச்சியான நடிப்பைக் கொடுத்திருக்கிறார் நடிகர் யோகிபாபு





சென்னை, 22 செப் 2024: தேனி, ஆண்டிப்பட்டியில் இருக்கும் செல்லதுரையின் (ஏகன்) அம்மா தகாத உறவால் செல்லத்துரையையும் அவன் தங்கை சுதாவையும் (சத்யாதேவி) சிறுவயதிலேயே விட்டு விட்டு தனக்கு விருப்பமான வாழ்க்கையைத் தேடி சென்று விடுகிறார். இதனால் கோபப்படும் செல்லதுரையின் அப்பா செல்லதுரையையும் அவன் தங்கையையும் பாட்டி பொறுப்பில் விட்டுட்டு அவரும் தன் வாழ்க்கையை பார்த்துக் கொண்டு தனியே சென்று விடுகிறார். கவனித்துக் கொண்ட பாட்டியும் கொஞ்ச நாளிலேயே இறந்து போக, கைவிடப்பட்ட செல்லதுரைக்கும் அவன் தங்கைக்கும் ஆதரவாக இருக்கிறார் அந்த ஊரில் இருக்கும் பெரியசாமி (யோகிபாபு).

தன்னுடைய கோழிப்பண்ணையிலேயே செல்லதுரைக்கு வேலையும் போட்டுக் கொடுத்து செல்லதுரையையும் சுதாவையும் படிக்க வைத்து ஆளாக்குகிறார். சின்ன வயதில் அம்மா செய்த காரியத்தால் ஊரில் பல சந்தர்ப்ப சூழ்நிலையால் அவமானப்படுத்தப்படுகிறார் செல்லதுரை. இன்னொரு பக்கம் கல்லூரிக்கும் சென்று படிக்கும் தங்கைக்கு காதல் வருகிறது. அம்மாவைப் போல தங்கையும் தனக்கு அவமானத்தைத் தேடி தரப் போகிறாளா எனக் கோபப்படுகிறான் செல்லதுரை. இதன் பிறகு, சுதா என்ன முடிவெடுக்கிறார்? இதை ஒட்டி நடக்கும் சம்பவங்கள் என்னென்ன என்பதுதான் 'கோழிப்பண்ணை செல்லத்துரை'.

அன்பும் பொறுமையும் வாழ்க்கையில் எப்படியான மாற்றத்தைக் கொண்டு வரும் என்பதுதான் படத்தின் கரு. கைவிடப்பட்ட குழந்தைகளுக்கு ஆதரவு கொடுப்பது, உணர்வுப்பூர்வமான காட்சிகளைப் பக்குவமாக கையாண்டிருப்பது என முதிர்ச்சியான நடிப்பைக் கொடுத்திருக்கிறார் நடிகர் யோகிபாபு. வழக்கமாக யோகிபாபு படங்களில் வரும் உருவ கேலிகள் இல்லாமல் சூழ்நிலைக்கு ஏற்ற நகைச்சுவைக்கு முயன்றிருப்பது ஆறுதல்.

கதையின் நாயகன் ஏகன் தனது கதாபாத்திரத்திற்குத் தேவையான நடிப்பைக் கொடுத்திருக்கிறார். தங்கை கதாபாத்திரத்தில் வரும் சத்யாவின் நடிப்பும் நன்று. கதாநாயகியாக வரும் பிரிகிடாவுடைய நடிப்பில் பல இடங்களில் அருமை. ரகுந்ததனுடைய இசை கதைக்கு ஏற்ற இசையை கொடுத்திருக்கிறது. அசோக்ராஜூடைய ஒளிப்பதிவு தேனியின் அழகை படம் பிடித்து காட்டியிருக்கிறது.

இசை, ஒளிப்பதிவு, ஆபாச வசனங்கள் இல்லாதது, ரத்தம் தெறிக்கும் வன்முறை இல்லாதது என கதையில் ஆறுதல் தரும் விஷயங்கள் நிறையவே. செல்லதுரை கதாபாத்திரத்தின் மேல் பார்வையாளர்களுக்கு உணர்வுப்பூர்வமான கனெக்ட் வரும்படியான காட்சிகள் எதுவும் பெரிதாக இல்லை. போலவே, அண்ணன் - தங்கை இடையிலான அன்பை அழுத்தமாக உணர்த்தும்படியான காட்சிகள் படத்தின் பிளஸ்.

## "லப்பர் பந்து" எதிர்பார்த்ததற்கும் மேல பல கொண்டாட்ட தருணங்களுடன் தனது முதல் படத்திலேயே சிக்ஸர் அடித்துள்ள இயக்குநர் தமிழரசன் பச்சமுத்து




சென்னை, 22 செப் 2024: தமிழில் இதுவரை ஏராளமான ஸ்போர்ட்ஸ் படங்கள் வந்துள்ளன. அதில் சில படங்கள் வெற்றி பெறவும் செய்துள்ளன. ஸ்போர்ட்ஸ் உடன் சரியான விகிதத்தில் எமோஷனல் அம்சங்களையும் கலந்து நல்ல திரைக்கதையுடன் வரும் படங்கள் எப்போதும் வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. அப்படியான படங்களில் ஒன்றாக வெளியாகியுள்ள படம்தான் 'லப்பர் பந்து'.

ரப்பர் பந்துகள் ரூ.15-க்கு விற்பனையான ஒரு காலகட்டத்தில் கதை தொடங்குகிறது. கிரிக்கெட் மீது ஈடுபாடு கொண்ட சிறுவனாக இருக்கும் அன்பு (ஹரிஷ் கல்யாண்) பள்ளியை கட் அடித்துவிட்டு கிரிக்கெட் ஆட செல்கிறார். ஜாலி ஃப்ரெண்ட்ஸ் டீம் என்ற அணியில் இருக்கும் வெங்கடேஷ் (டிஎஸ்கே), தாழ்த்தப்பட்ட சாதியை காரணம் காட்டி அன்புவை அணியில் வேண்டா வெறுப்பாக சேர்த்துக் கொள்கிறார். அதே போட்டியில் எதிரணியில் பெரும் பில்டப் உடன் அந்த பகுதியின் சச்சின் போல கொண்டாடப்படும் கெத்து பூமாலை (அட்டகத்தி தினேஷ்) பேட்டிங்கில் வெளுத்து வாங்குகிறார். பேட்டிங்கில் அவருடைய பலவீனத்தை சரியாக அன்பு கணித்தாலும், அவருக்கு பவுலிங் வாய்ப்பு கிடைக்காமல் போகவே அங்கிருந்து விரக்தியுடன் கிளம்பி விடுகிறார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு ரப்பர் பந்து ரூ.35-க்கு விற்கப்படும் தற்போதைய காலகட்டத்தில் இளைஞனாக இருக்கும் அன்பு, யாரென்று தெரியாமலேயே கெத்து பூமாலையின் மகளை காதலிக்கிறார். ஒரு போட்டியில் தற்செயலாக கெத்து - அன்பு இருவரும் மோதும்போது இருவருக்குள்ளும் ஈகோ பிரச்சினை வெடிக்கிறது. இந்த ஈகோ பிரச்சினை இருவரது தனிப்பட்ட வாழ்க்கையிலும் பல சிக்கல்களைக் கொண்டுவருகிறது. இருவரும் அந்த சிக்கல்களிலிருந்து மீண்டது எப்படி என்பதை விறுவிறுப்பாகவும், நெகிழ்ச்சியான தருணங்களுடனும் சொல்கிறது 'லப்பர் பந்து'.

கிரிக்கெட்டை உயிர்நாடியாகக் கொண்ட இந்தியாவில் குறிப்பாக சிஎஸ்கே அணியையும், தோனியையும் தங்களின் வாழ்க்கையில் ஓர் அங்கமாக பார்க்கும் ரசிகர்களைக் கொண்ட தமிழ்நாட்டில், கிரிக்கெட் தொடர்பான படங்களுக்கு எப்போதுமே ஒரு எதிர்பார்ப்பு இருக்கும். அந்த எதிர்பார்ப்பை பாதி பூர்த்தி செய்தாலே அந்த படம் பெரிய வெற்றியை பெற்றுவிடும். அந்த வகையில், எதிர்பார்த்ததற்கும் மேல பல கொண்டாட்ட தருணங்களுடன் தனது முதல் படத்திலேயே சிக்ஸர் அடித்து ஜெயித்திருக்கிறார் இயக்குநர் தமிழரசன் பச்சமுத்து.

தமிழ்நாட்டில் தெருவுக்கு தெரு ஆடப்படும் ரப்பர் பந்து கிரிக்கெட் பின்னணியில் ஒரு எளிமையான கதையை பிடித்து, அதற்கேற்ற ஒரு வலுவான திரைக்கதையை உருவாக்கி ஒரு முழுமையான படைப்பை கொடுத்திருக்கிறார். படத்தின் எந்த இடத்திலும் இது ஒரு புதுமுக இயக்குநரின் படம் என்ற சாயல் எங்குமே தெரியவில்லை. படம் தொடங்கிய முதல் காட்சியிலேயே நம் முகத்தில் புன்னகையை கொண்டு வந்துவிடும்படியான ஒரு வசனம். ஒரு பேருந்தில் பாடல் ஒன்று ஓடிக் கொண்டிருக்கிறது. அதைக் கேட்கும் கதாபாத்திரம் ஒன்று, "ராஜா ராஜாதான்யா" என்று அருகில் உள்ள மற்றொரு கதாபாத்திரத்திடம் சொல்கிறது. உடனே பின்னால் நிற்கும் சிறுவன், "ராஜா ராஜாதான். ஆனா இந்த பாட்டு போட்டது தேவா" என்று சொல்கிறது. இப்படியாக தொடங்கும் படத்தில் இதுபோன்ற சின்னச் சின்ன சுவாரஸ்யமான தருணங்கள் ஏராளமாக உள்ளன.

படத்தின் பெரும் பலமே அதன் கதாபாத்திர வார்ப்புகள்தான். தினேஷ், ஹரிஷ் கல்யாண், ஸ்வஸ்விகா, சஞ்சனா கிருஷ்ணமூர்த்தி, காளி வெங்கட், பால சரவணன், தினேஷின் நண்பராக வரும் ஜென்சன் திவாகர் என அனைவரது கதாபாத்திரங்களும் சிறப்பாக எழுதப்பட்டிருக்கின்றன. அட்டகத்தி தினேஷுக்கு நீண்டநாட்களுக்குப் பிறகு பேர் சொல்லும்படியான ஒரு கதாபாத்திரம். ஈகோ தலைக்கேறிய நபராகவும், அதே நேரம் மனைவி, மகளிடம் அடங்கிப் போகும் குடும்பத் தலைவனாகவும் கலக்கியிருக்கிறார். குறிப்பாக கோபித்துக் கொண்டு சென்ற மனைவி திரும்ப வீட்டுக்கு வந்ததும், குழந்தையை போல அழும் காட்சியில் நெகிழ வைத்து விடுகிறார்.

## ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் உச்சி மாநாட்டில் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் செயலாளர் தொடக்க உரையாற்றினார்

சென்னை, 22 செப் 2024: சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் செயலாளர் திருமிகு லீனா நந்தன், ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் இன்று நடைபெற்ற எதிர்கால பக்க நிகழ்வின் உச்சி மாநாட்டில் உரையாற்றினார், இது நிலையான எதிர்காலத்திற்கான இளைஞர்களை மேம்படுத்துதல்: தலைமுறைகளுக்கு இடையேயான பொறுப்பு மற்றும் ஒரு நியாயமான மாற்றத்திற்கான திறன்களை மையமாகக் கொண்டது.

சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை குறித்த இரண்டு நிமிட வீடியோ தொடக்க உரையில் திரையிடப்பட்டது. பருவநிலை மாற்றத்தின் சவாலை எதிர்கொள்ள இந்தியாவின் பன்முக அணுகுமுறையின் தத்துவம் மற்றும் உண்மையான உணர்வைப் படம்பிடிக்கும் முயற்சியாக வாழ்க்கை குறித்த இரண்டு நிமிட வீடியோ உள்ளது என்று மத்திய செயலாளர் திருமதி லீனா நந்தன் கூறினார். சிஓபி-26-ல் இந்தியப் பிரதமர் வகுத்துள்ள முக்கிய உத்திகளில் லைஃப் அதாவது, சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை ஒரு உத்தி என்று அவர் மேலும் கூறினார்.

ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் முன்னிலையில் 2022 அக்டோபரில் பிரதமர் திரு நரேந்திர மோடியால் மிஷன் லைஃப் உலகளவில் தொடங்கப்பட்டது என்பதை அவர் எடுத்துரைத்தார். மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் தலைமையில் நாடு மற்றும் உலகம் முழுவதும் லைஃப் இயக்கம் செயல்படுத்தப்படுகிறது.

மிஷன் லைஃப் நமது அன்றாட நடத்தைகளில் சுற்றுச்சூழலுக்கு உகந்த தேர்வுகள் மற்றும் நிலையான வாழ்க்கை முறைகளை ஏற்றுக்கொள்வதை நோக்கி மாற்றத்தை ஊக்குவிக்கிறது என்று கூறினார்.

இந்தியா முன்மொழிந்த பருவநிலை நடவடிக்கை தீர்மானத்திற்கு பொலிவியா மற்றும் இலங்கையின் ஆதரவு கிடைத்தது என்று அவர் வலியுறுத்தினார். இந்த வேகத்தை அடிப்படையாகக் கொண்டு, ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் பேரவை மார்ச் 1, 2024 அன்று நைரோபியில் அதன் ஆறாவது அமர்வில் நிலையான வாழ்க்கை முறைகளை ஊக்குவிக்கும் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது என்று அவர் கூறினார். மிஷன் லைஃப் ஊக்குவித்த நடவடிக்கைகளை செயல்படுத்துவதன் மூலம் 2030 ஆம் ஆண்டுக்குள் உலகளாவிய பசுமை இல்ல வாயு உமிழ்வை ஆண்டுக்கு 2 பில்லியன் டன் குறைக்க முடியும் என்று சர்வதேச எரிசக்தி நிறுவனம் மதிப்பிடுகிறது என்று அவர் மேலும் கூறினார்.

பசுமைத் திறன் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பசுமை வேலைகளுக்கான திறன் கவுன்சில் ஆகியவற்றுடன் இணைந்து இந்தியாவின் புதிய கல்விக் கொள்கை, பசுமை வேலைகளுக்கான அதிகரித்து வரும் தேவையை எதிர்கொள்ள ஒரு விரிவான தீர்வை வழங்குகிறது என்று திருமதி லீனா நந்தன் கூறினார்.

"தாயின் பெயரால் ஒருமரம்'' திட்டத்தை தொடங்கியதில் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குத் தலைமையை மத்திய செயலாளர் திருமதி லீனா நந்தன் எடுத்துரைத்தார். ஒருவரின் சொந்த அன்னை மற்றும் தாய் மீதான அன்பு மற்றும் மரியாதையின் அடையாளமாக மரங்களை நடுவதில் இந்திய மற்றும் உலக குடிமக்களை ஈடுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டது. இந்த முயற்சியின் கீழ் ஜூன் 5 முதல் செப்டம்பர் 17 வரை இந்தியாவில் 750 மில்லியனுக்கும் அதிகமான மரங்கள் நடப்பட்டுள்ளன, இது ஒரு நாளைக்கு சுமார் 7 மில்லியன் மரங்கள் ஆகும்.

இன்று நாம் எடுக்கும் தேர்வுகள் பூமிக்கு பயனளிப்பது மட்டுமல்லாமல், நமது குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் எதிர்காலத்தையும் வடிவமைக்கும் என்பதை அங்கீகரித்து, அனைவரும் ஒன்றிணைந்து முன்னேற வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

## இந்திய விமானப்படையின் 92வது ஆண்டு விழாவை முன்னிட்டு சென்னையில் மிகப்பிரம்மாண்டமான விமான வானசாகசக் காட்சி

சென்னை, 22 செப் 2024: இந்திய விமானப்படை, அதன் 92வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில், வரும் அக்டோபர் 6 ஆம் தேதி காலை பதினோரு மணிமுதல் சென்னை மெரினா கடற்கரையில் மிகப்பெரிய விமான வானசாகசக்காட்சி நிகழ்த்தவுள்ளது.

இக்கொண்டாட்டத்தின் இந்த ஆண்டுக்கான கருப்பொருள் "இந்திய விமானப்படை - சக்ஷம், சஷக்த், ஆத்மநிர்பர்" என்பதாகும். நாட்டின் வான்வெளியைப் பாதுகாப்பதில் இந்திய விமானப்படையின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை இது எடுத்துக்காட்டுகிறது.

மெரினா கடற்கரையில் பார்வையாளர்கள் அன்றைய தினம் மெய்சிலிர்க்க வைக்கும் காட்சிகளை காணலாம். அன்று இந்திய விமானப்படையின் வகைவகையான 72 விமானங்கள் காண்போரை கவர்ந்திழுக்கும் ஏரோபாட்டிக் வான் சாகசங்களில் ஈடுபடும்.

விமானக் கண்காட்சியில், வானில் லாவகமாக வந்து குட்டிக்கரணங்கள் அடித்து வியப்புக்குள்ளாக்கும் ஆகாஷ் கங்கா அணி, ஸ்கைடைவிங் கலையில் விமானங்கள் ஒன்றுடன் ஒன்று மிக நெருக்கமாக வந்து சாகசங்கள் நிகழ்த்தும் சூர்யகிரண் ஏரோபாட்டிக் டீம், வான் நடனத்தில் ஈடுபடக்கூடிய சாரங் ஹெலிகாப்டர் அணி ஆகியவை தங்களது வான்கலைகளால் மக்களை பரவசத்தில் ஆழ்த்தும்.

மேலும், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட நவீன இலகுரக போர் விமானம் தேஜஸ், இலகுரக போர் ஹெலிகாப்டர் பிரசாந்த் மற்றும் டகோட்டா, ஹார்வர்ட் போன்ற பாரம்பரிய பெருமைவாய்ந்த பழங்கால விமானங்கள், போக்குவரத்து விமானங்கள் என அனைத்துவகை விமானங்களும் விதவிதமான அணிவகுப்பில் ஈடுபடும். அக்டோபர் 6, 2024 அன்று, மெரினா கடற்கரையில் நிகழும் இந்த விமான சாகசக்கண்காட்சியை அனைவரும் இலவசமாக பார்வையிடலாம். இதற்கு பதிவுசெய்ய அவசியமில்லை. இந்த நிகழ்வானது பார்வையாளர்களுக்கு மறக்க முடியாத அனுபவமாக இருக்கும். இது இந்தியவிமானப்படையின் வலிமையையும், திறன்களையும், நாட்டின் வான்பரப்பை பாதுகாப்பதில் அதன் ஈடுபாட்டையும் பிரதிபலிக்கும். இதுபோன்ற வானசாகசக்காட்சி கடந்த ஆண்டில் விமானப்படை தினமான அக்டோபர் 08, 2023 அன்று பிரயாக்ராஜில் உள்ள சங்கம் பகுதியில் நடத்தப்பட்டது, இது லட்சக்கணக்கான பார்வையாளர்களை ஈர்த்தது. இம்முறை சென்னையில் சுமார் 15 லட்சம் பேர் இதில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# ஜாக்கி சான் நடிக்கும் 'எ லெஜன்ட்' ('தி மித் 2') திரைப்படத்தை இந்தியாவில் தமிழ், தெலுங்கு, ஹிந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் விஸ்வாஸ் ஃபிலிம்ஸ் வெளியிடுகிறது




சென்னை, 22 செப் 2024: உலகெங்கும் பெரும் ரசிகர் பட்டாளத்தை பெற்றிருப்பவர் ஜாக்கி சான். இந்தியாவும் இதற்கு விதிவிலக்கல்ல. அவரது சமீபத்திய 'எ லெஜன்ட்' ('தி மித் 2') திரைப்படத்தை இந்தியாவில் தமிழ், தெலுங்கு, ஹிந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் விஸ்வாஸ் ஃபிலிம்ஸ் விரைவில் வெளியிடுகிறது. ஸ்டான்லி டாங் இயக்கியிருக்கும் இத்திரைப்படம், 'தி மித்' சூப்பர் ஹிட் படத்தின் இரண்டாம் பாகம் ஆகும். பரபர சண்டைகள், விறு விறு சாகசங்கள், உள்ளத்தை தொடும் உணர்வுகள், கற்பனைக்கு எட்டாத காட்சிகள் என கண்களுக்கு விருந்து படைக்கும் வகையில் இப்படம் உருவாகியுள்ளது. ஜாக்கி சான், லே சாங், நா ஜா, ஆரிஃப் லீ, லி சென், பெங் சியோவ்ரான் மற்றும் ஜெங் யெச்சென் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்திருக்கும் இந்த திரைப்படத்தில் தற்கால அகழ்வாராய்ச்சி நிபுணர் மற்றும் முழுக்க செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட இளம் வீரர் என இரண்டு முற்றிலும் மாறுபட்ட பாத்திரங்களில் ஜாக்கி சான் தோன்றுகிறார். தொல்லியல் நிபுணரான பேராசிரியர் ஃபாங்கைச் சுற்றி கதை சுழல்கிறது. பனிப்பாறை பயணத்தின் போது தனது மாணவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட கலைப்பொருட்களின் அமைப்பு, கனவில் அவர் பார்த்த ஜேட் பதக்கத்தைப் போலவே இருப்பதை அவர் கவனிக்கிறார்.

கனவுகளை நிஜத்துடன் பதக்கம் இணைப்பது போல் அவருக்கு தோன்றுகிறது. ஆர்வத்தால் உந்தப்பட்ட பேராசிரியர் ஃபாங், தனது கனவுகளுக்குப் பின்னால் உள்ள உண்மையைத் தேடி, பனிப்பாறை கோவிலுக்குள்ளான ஆழமான பயணத்தில் ஆராய்ச்சிக் குழுவை வழிநடத்தி அற்புதமான சாகசத்தை மேற்கொள்கிறார்.

இயக்குநர் ஸ்டான்லி டாங் அதிரடி திரைப்படங்களை உருவாக்குவதில் நிபுணத்துவம் பெற்றவர். ஜாக்கி சானுடன் பலமுறை அவர் கைகோர்த்துள்ளார். 1992ம் ஆண்டிலேயே, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பல வசூல் சாதனைகளை முறியடித்த அவர் இயக்கிய 'போலீஸ் ஸ்டோரி மிமிமி: சூப்பர் காப்' படம் அந்த வருடத்திற்கான கோல்டன் ஹார்ஸ் விருதுகளில் சிறந்த படமாக பரிந்துரைக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து, அவரது 'ரம்பிள் இன் தி பிராங்க்ஸ்,' 'போலீஸ் ஸ்டோரி 4: ஃபர்ஸ்ட் ஸ்ட்ரைக்,' 'தி மித்,' 'குங் ஃபூ யோகா,' மற்றும் இதர அதிரடித் திரைப்படங்கள் பாக்ஸ் ஆபிஸ் சாதனைகளை குவித்தன. அவற்றில், 'ஃபர்ஸ்ட் ஸ்ட்ரைக்', 1996ல் ஹாங்காங் திரையுலக வரலாற்றில் அதிக வசூல் செய்த சீன மொழித் திரைப்படமாக சாதனை படைத்தது.

'எ லெஜன்ட்' ('தி மித் 2') திரைப்படத்திற்காக ஜாக்கி சானும் ஸ்டான்லி டாங்கும் மீண்டும் இணைந்திருப்பது இந்திய ரசிகர்களுக்கு விருந்து படைக்கும் வகையில் அமைந்துள்ளது. அனைத்து வயதினரையும் கவரும் வகையில் இத்திரைப்படம் உருவாகியுள்ளது.

# ஸ்டார் சினிமாஸ் முகேஷ் டி. செல்லையா தயாரிப்பில் பொன்ராம் இயக்கத்தில் சரத்குமார், சண்முகபாண்டியன் இணைந்து நடிக்கும் யுவன் ஷங்கர் ராஜா இசையில் புதிய திரைப்படம்



சென்னை, 22 செப் 2024: 'வருத்தப்படாத வாலிபர் சங்கம்', 'ரஜினி முருகன்', 'சீமராஜா', 'எம்ஜிஆர் மகன்', 'டிஎஸ்பி' என ஜனரஞ்சக வெற்றி படங்களை தொடர்ந்து இயக்கி வரும் பொன்ராம், தனது அடுத்த திரைப்படத்திற்காக பிரம்மாண்ட கூட்டணியை அமைத்துள்ளார். சுப்ரீம் ஸ்டார் சரத்குமார், மற்றும் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் மகன் சண்முகபாண்டியன் முதல் முறையாக இணைந்து நடிக்கும் இப்படத்திற்காக இசை அமைப்பாளர் யுவன் ஷங்கர் ராஜா உடன் பொன்ராம் முதல் முறையாக கை கோர்த்துள்ளார். கலகலப்பும் விறுவிறுப்பும் நிறைந்த, நகைச்சுவையும் சண்டை காட்சிகளும் சரிவிகிதத்தில் கலந்த கமர்ஷியல் திருவிழாவாக உருவாகும் இப்படத்தை பெரும் பொருட்செலவில் புதிய நிறுவனமான ஸ்டார் சினிமாஸ் பேனரில் முகேஷ் டி. செல்லையா தயாரிக்கிறார். புதுமுகம் தார்னிகா நாயகியாக நடிக்கிறார். காளி வெங்கட், முனீஷ்காந்த், கல்கி ராஜா உள்ளிட்டோர் நடிக்கும் இப்படத்திற்கு பாலசுப்ரமணியம் ஒளிப்பதிவு செய்கிறார், தினேஷ் பொன்னுராஜ் படதொகுப்பை கவனிக்க, கலை இயக்கத்திற்கு சரவண அபிராமன் பொறுப்பேற்க, மீனாக்ஷி நாராயணசாமி ஆடைகளை வடிவமைக்கிறார். கவிஞர்கள் சினேகனும், யுகபாரதியும் பாடல்களை எழுதுகின்றனர். சண்டை பயிற்சி - ஃபீனிக்ஸ் பிரபு, நடன இயக்கம் - அசார். தேனி, ஆண்டிபட்டி, உசிலம்பட்டி சுற்றி இருக்கும் கிராமங்களையும், அங்கும் இருக்கும் மக்களின் வாழ்க்கையையும் இப்படம் பேசுகிறது. இயக்குநர் பொன்ராமுக்கே உரிய நகைச்சுவையும், அதிரடி ஆக்ஷன் காட்சிகளும் படத்தில் நிரம்பி இருக்கும். ஸ்டார் சினிமாஸ் முகேஷ் டி. செல்லையா தயாரிப்பில் பொன்ராம் இயக்கத்தில் சரத்குமார், சண்முகபாண்டியன் இணைந்து நடிக்கும் புதிய திரைப்படத்தின் படப்பிடிப்பு தேனியில் தொடங்கி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

# மசிராவில் பயிற்சியை இந்திய விமானப்படை வெற்றிகரமாக நிறைவு செய்தது

சென்னை, 22 செப் 2024: ஓமனின் ராயல் விமானப்படையுடன் இந்திய விமானப்படை மசிராவில் உள்ள ராபோ விமான தளத்தில் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. மிக் -29 மற்றும் ஜாகுவார் விமானங்கள், எஃப் -16 மற்றும் ஆர்.ஏ.எஃப்.ஓவிலிருந்து ஹாக் ஆகியவை பங்கேற்ற விரிவான தொடர் பயிற்சிப் பணிகளில் பங்கேற்ற பின்னர் இந்திய விமானப்படை ஐ.ஏ.எஃப் குழு இந்தியா திரும்பியுள்ளது. இந்தப் பயிற்சி இரு விமானப் படைகளுக்கும் இடையிலான செயல்பாட்டு ஒருங்கிணைப்பு மற்றும் தந்திரோபாய திறன்களைத் தவிர ஓமன் உடனான பாதுகாப்பு உறவுகளை கணிசமாக மேம்படுத்தியது.


கிழக்கு பாலம் 7 பயிற்சி ராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்துவதையும் இரு படைகளின் இயங்குதன்மையை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டது. இந்தப் பயிற்சியில் சிக்கலான விமான நடவடிக்கைகள், வானிலிருந்து வான் போர் பயிற்சிகள் மற்றும் திறன்களை மேம்படுத்த வடிவமைக்கப்பட்ட பணி காட்சிகள் ஆகியவை அடங்கும்.

பயிற்சிகளுக்கு அப்பால், கிழக்கு பாலம் 7 இந்திய விமானப்படை மற்றும் ராபோ பணியாளர்களிடையே தோழமையையும் பரஸ்பர மரியாதையையும் வளர்த்தது. கூட்டு விளக்கங்கள், விளக்கங்கள் மற்றும் கலாச்சார பரிமாற்றங்கள் தொழில்முறை பிணைப்புகளை உருவாக்கவும், பரஸ்பர புரிதல் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தவும் உதவியது.

இந்த ஒத்திகை வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டிருப்பது, பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்பை பராமரிப்பதில் இந்தியாவும் ஓமனும் கொண்டுள்ள உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. பல்வேறு சூழ்நிலைகளில் கூட்டாக செயல்படுவதற்கான தங்கள் திறனை இரு படைகளும் நிரூபித்தன, வளர்ந்து வரும் பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ள தங்களின் தயார்நிலையை மேம்படுத்தின.

எதிர்காலத்தில் மேலும் மேம்பட்ட ஒத்துழைப்பை நோக்கமாகக் கொண்டு, இந்த கூட்டுப் பயிற்சிகளின் பாரம்பரியத்தைத் தொடர இந்திய விமானப்படையும் ஓமனின் ராயல் விமானப்படையும் எதிர்நோக்குகின்றன.

# ஏ ஆர் ஆர் ஃபிலிம் சிட்டி - சென்னையில் ஓர் அதிநவீன மெய்நிகர் தயாரிப்புக்கூடத்தை யூ ஸ்ட்ரீம் என்ற பெயரில் தொடங்குகிறது!




சென்னை, 22 செப் 2024: முழுமையான தொழில்நுட்பப்பணிகளை வழங்கும் மெய்நிகர் தயாரிப்புக்கூடமான யூ ஸ்ட்ரீம், சென்னை ஏ ஆர் ஆர் ஃபிலிம் சிட்டியில் தன் புத்தெழுச்சியான பயணத்தைத் 22 செப்டம்பர் 2024 அன்று தொடங்குகிறது. ஆஸ்கர் விருது வென்ற இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் மற்றும் தொழில்துறை முன்னோடி ஸ்ரீதர் சந்தானம் கூட்டணியில் யூ ஸ்ட்ரீம் உருவாகிறது. இந்திய சினிமாவின் புதிய யுகத்தை வரவேற்க வழிவகுப்பதாய் இது வடிவம் எடுத்திருக்கிறது.

வியப்பூட்டும் எல் ஈ டி திரை அமைப்புகள் கொண்ட இந்த ஸ்டூடியோவில், கலைஞர்கள் கணினி காட்சியமைப்புகளுடன் கற்பனை செய்ததை, நேரடியாக அந்தக்கணத்திலேயே கண் முன் காட்சிப்படுத்த முடிகிறது. இந்த நவீன டிஜிட்டல் நுட்பத்தைக் உலகப்பதிவுகள், அக்கணத்தின் கற்பனைக்காட்சிப்படுத்துதல், செயல்திறன் பதிவு, பல மெய்நிகர் காட்சிகளை ஒருங்கிணைத்துச் செயல்படுத்தும் சிமுல்காம் நுட்பம், கேமராவினுள்ளேயே செயல்படுத்தப்படும் தொழில்நுட்பங்கள் (ஐ சி வி எஃப் எக்ஸ்) கொண்டு உலகின் மெய்நிகர் தயாரிப்புத்துறையில் முன்னணியில் இருக்கிறது யூ ஸ்ட்ரீம்.

நவீன அம்சங்கள் மற்றும் விரிவுபடுத்தக்கூடிய கட்டமைப்பு

1.9 பிக்சல் தடத்திற்கு உட்பட்ட முதன்மையான எல் ஈ டி சுவர் 40 அடி நீளமும், 20 அடி உயரமும் கொண்டது. நேரடி 3ஞி சூழல்களுக்காக வடிவமைக்கப்பட்ட அதிவேகத் துல்லியமான ரெண்டர் (ரெண்டர்) கட்டமைப்பு. 7,000 சதுர அடி பரப்பளவுடைய ஸ்டூடியோ.

விரிவான கேமரா டிராக்கிங் அமைப்பு, காட்சிகளுக்கு ஏற்ற ஒளியமைப்பைப் பெறுதல், படக்காட்சிகளின் தரவுகளை உடனுக்குடன் பதிவேற்றுதல், உயர்தரப் படக்காட்சிகள் மற்றும் நிறக்கட்டமைப்புகளை விரைவாக, விருப்பத்திற்கு ஏற்ற முறையில் செயல்படுத்தும் வசதி.

ஸ்டூடியோவை 20,000 சதுர அடிக்கு விரிவுபடுத்தும் திட்டம்.

படத்தயாரிப்பாளர்களுக்காக, தொடக்கம் முதல் நிறைவு வரை ஒருங்கிணைந்த தயாரிப்புத் தீர்வுகளை வழங்குதல்.

படப்பிடிப்பிலிருந்து, எடிட்டிங் & இறுதிப்பணி வரை சீராகச் செயல்படும் உட்புற (ஆன்-சைட்) படப்பிடிப்பிற்குப் பின்பான தயாரிப்பு அறைகள்.

விரிவுபடுத்தக்கூடிய ரெண்டர் (ரெண்டர்) கணினிகள், மிகக்கடினமான காட்சியமைப்புகளையும் எளிதாகக் கையாள்கிற வகையில் வடிவமைக்கப்பட்ட கணிப்பொறிகள்.

மொபைல் எல் ஈ டி பக்கச்சுவர்கள், நகர்த்தக்கூடிய எல் ஈ டி வான்முக விளக்குகள் (ஸ்கை லைட்) மற்றும் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட கேமரா-டிராக்கிங் அமைப்புகள். இதனால் இலகுவாகும் படத்தயாரிப்பு.

திரைத்துறையின் தொலைநோக்குப்பார்வையைக் கொண்டு இயங்கும் பொறியியல் பணிமனை, தயாரிப்பு பணிச்சூழல், தயாரிப்பின் ஒவ்வொரு கட்டத்திற்கும் ஆதரவான உபகரணக் களஞ்சியம்.

உடனடி கூட்டுச்செயல்பாட்டிற்காக இணைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த இணையப்பதிவேற்றச் சேமிப்பு (கிளவுட் இண்டக்ரேடட் ஒர்க்ஃப்ளோ)

தொழில்நுட்பத்தை முன்னிலைப்படுத்துதல்.

உலகின் எந்த மூலையில் இருப்பினும், படத்தயாரிப்பாளர்கள் அன்றாடம் பதிவேற்றும் வீடியோ காட்சிகளை உடனடியாக அணுகக்கூடிய, 'காமிராவிலிருந்து இணையச்சேமிப்பு' (கேமரா டு கிளவுட்) என்ற புதியதொரு தொழில்நுட்பத்தை உருவாக்குதல்.

முழுமையான ஒருங்கிணைந்த இணைய அமைப்பு, தயாரிப்பு காலக்கெடுக்களை விரைவுபடுத்தி, இயக்குநர்கள், படத்தொகுப்பாளர்கள், வி எஃப் எக்ஸ் குழுக்கள், மற்றும் படப்பதிவிற்குப் பிந்தைய தயாரிப்பு விற்பனையாளர்களுக்கு நேரடி ஒத்துழைப்பைச் சாத்தியமாக்குதல்.

ஸ்டூடியோவின் இணைய அடிப்படையிலான வி எஃப் எக்ஸ் மற்றும் தயார்நிலை காட்சிகள் அமைப்பு வழியாக மேம்பட்ட தீர்வை வழங்குகுதல்.

காட்சிகள், கோப்புகள் மற்றும் காட்சிப்படிமங்களின் பரிமாற்றத்தின் போது ஏற்படும் தாமதங்களை கணிசமாகக் குறைத்து, திரைப்படக்குழுவின் தயாரிப்புத் திறனை மேம்படுத்துதல்

பல்துறை தயாரிப்பு இடங்கள் (வெர்சடைல் ப்ரொடக்□ஷன் ஸ்பேசஸ்)

பல்வேறு தனித்துவமான தயாரிப்பு அம்சங்கள்.

திரைக்கலைஞர்களின் பல்வேறு படைப்பாற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சிறப்பாக உருவாக்கப்பட்ட மெய்நிகர் இடம் தேடல் பகுதி, தொழில்நுட்பத்தேடல் பகுதி, வி ஐ பி பார்வையிடல் பகுதி, மேம்பட்ட செயல்திறன் பதிவிற்கான பகுதிகள், சிமுல்கேம் கட்டமைப்புகள்.

இயக்குநர்கள், நிர்வாகிகள், விருந்தினர்கள் படப்பிடிப்பின் போதே முன்வரிசையில் அமர்ந்து நேரடியாகக் காட்சிகளை காணும் சாத்தியம் மினியேச்சர் ஸ்கேனிங், மினியேச்சர் 3டி பிரிண்டிங், காஸியன் ஸ்பிளாட்டிங் தொழில்நுட்பங்களையும் விரைவில் வழங்குதல்.

வீடியோக்களில் இருந்து

குறைந்த படங்கள் அல்லது கையிருப்பு அசாதாரணமான உண்மை சார்ந்த 3டி காட்சிகளை உருவாக்குதல்.

சென்னையின் மையத்தில் உள்ள இரண்டாவது, சிறிய எல் ஈ டி மேடையும் நிகரான உயர்தொழில்நுட்ப வசதிகளை கொண்டிருக்கிறது.

இந்தக்கூடுதல் வசதி குறுகிய வடிவ உள்ளடக்கங்கள், இசை வீடியோக்கள், மற்றும் நிறுவனப்படப்பிடிப்புகளைப் பூர்த்தி செய்யும். அனைத்துத் தரப்பட்ட தயாரிப்புத் திட்டங்களையும் ஆதரிக்கக் கூடியது.

சிறந்த திறன் மற்றும் புதுமைக்கான உலகளாவிய கூட்டுச்செயல்பாடுகள்

இந்தியாவில் மெய்நிகர் தயாரிப்பின் தரத்தை உயர்த்துதல்.

உலகின் முன்னணி கணினி காட்சி மற்றும் கைவினை நுட்பங்களை கொண்ட ஏஎல் தொழில்நுட்ப நிறுவனங்களுடன், பன்னாட்டு வழிநடத்துர்களுடன், பங்குதாரர்களுடன் வகுத்த யுத்திகளைச் செயல்படுத்துதல்.

சிஜி ப்ரோ நிறுவனம், உலகளாவிய திறமைகளை அறிமுகப்படுத்துவதுடன் வி எஃப் எக்ஸ் துறையில் நவீனப் பயிற்சியையும் வழங்குவது.

வியூ, டைமென்ஷன்5, க்யூபரிக் போன்ற ஏஎல் திரைப்படத்தொழில்நுட்ப நிறுவனங்கள் ஏஐ மூலம் உருவாக்கப்படும் பின்னணிகளைக் கொண்டு உள்ளூர்த்தயாரிப்புகளின் தரத்தையும் படைப்பாற்றலையும் பன்னாட்டுத்தரத்திற்கு உயர்த்துவதை உறுதிசெய்தல்.

உலகளாவிய ஸ்டூடியோக்கள் மற்றும் வி எஃப் எக்ஸ் கலைஞர்களுடன் நெருங்கிய தொடர்புகளை மேற்கொண்டு, இந்திய திரைப்படத்தயாரிப்புகளின் தரத்தை மேம்படுத்துவதில் தீவிரமாகச் செயல்படுதல்.

ஏ ஆர் ஆர் ஃபிலிம் சிட்டி: ஏ ஆர் ஆர் திரைப்பட நகரம் - உலகளாவிய தயாரிப்புகளுக்கான ஒரு கலைத்துறை மையம் சென்னையின் அருகில் 100 - ஏக்கர் பரப்பளவில் அமைந்த ஏ ஆர் ஆர் ஃபிலிம் சிட்டி, உள்ளூர் மற்றும் சர்வதேசத்தயாரிப்புகளுக்கான சிறந்த சூழலை வழங்குகிறது. யூ ஸ்ட்ரீம் - ஸ்டூடியோவின் உயர்தொழில்நுட்ப மெய்நிகர் தயாரிப்பு மேடையைத் தவிர, ஏ ஆர் ஆர் ஃபிலிம் சிட்டி, இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் அவர்களால் தனிப்பட்ட முறையில் வடிவமைக்கப்பட்ட உலகத்தரத்திலான இசைப்பதிவு, தயாரிப்புக் கூடத்தையும் கொண்டிருக்கிறது. பாரம்பரிய திரைப்படத்தயாரிப்பு, படப்பிடிப்பு அரங்க உருவாக்கத்திற்குப் பொருத்தமான இரண்டாவது மேடை மற்றும் பல அளவிலான தயாரிப்புக் குழுக்களுக்கான தனிப்பட்ட வசதிகளையும் கொண்டிருக்கிறது. திரை இயக்குநர்கள் தங்கள் படைப்பாக்கத் திட்டங்களில் முழுமையான கவனம் செலுத்துவதற்கு வழிவகுக்கிறது, இந்தக் கலைமையம். அதே நேரத்தில் சிறந்த தரமான வசதிகளை ஒரே இடத்தில் பயன்படுத்தும் வாய்ப்பையும் வழங்குகிறது.

தொழில்நுட்பம், படைப்பாற்றல், ஒத்துழைப்பு, கூட்டு உழைப்பு மனப்பாங்கின் கலவையுடன், யூ ஸ்ட்ரீம் இந்தியாவில் மட்டும் அல்லாமல் உலகம் முழுவதிலும் உள்ள திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கான ஒரு மகிழ்ச்சியான கலங்கரை விளக்கமாகச் சுழன்று எரியும்.

# கர்நாடகாவின் பசுமை போக்குவரத்து திட்டத்திற்கு ஆற்றலளிக்கும் செர்வோடெக் பவர் சிஸ்டம்ஸ்!

சென்னை, 22 செப் 2024: மின்வாகனங்களுக்கான சார்ஜர் தயாரிப்பில் இந்தியாவின் மிகப்பெரிய நிறுவனமான செர்வோடெக் பவர் சிஸ்டம்ஸ் லிமிடெட், கர்நாடகாவின் பெங்களூரு எல்க்ட்ரிசிட்டி சப்ளை கம்பெனி லிமிடெட் (பெஸ்காம்) நிறுவனத்திடமிருந்து 11 டி சி அதிவேக மின்வாகன சார்ஜிங் நிலையங்களை நிறுவுவதற்கான ஒரு பெரிய ஆர்டரைப் பெற்றிருக்கிறது. கர்நாடகாவெங்கும் 11 பிராந்திய போக்குவரத்து அலுவலக (ஆர்டிஓ) வளாகங்களில் பொது மின்வாகன சார்ஜிங் நிலையங்களை இவ்வொப்பந்தத்தின் கீழ் செர்வோடெக் நிறுவும். கர்நாடகாவின் பல்வேறு பிராந்தியங்களில் தங்களது மின்வாகனங்களுக்கு சார்ஜிங் செய்வதை அவ்வாகனங்களின் உரிமையாளர்களுக்கு சவுகரியமானதாக ஆக்கும் விதத்தில் சார்ஜிங் கட்டமைப்பை இச்செயல்திட்டம் கணிசமாக மேம்படுத்தும். திட்டமிடல் மற்றும் வடிவமைப்பிலிருந்து சார்ஜிங் நிலையங்களை நிறுவி செயல்பாட்டிற்கு கொண்டு வரும் வரை ஒட்டுமொத்த திட்ட செயலாக்கத்தையும் செர்வோடெக் நிர்வகிக்கும். ஒவ்வொரு ஆர் டி ஓ வளாக அமைவிடத்திலும் சரியான இடத்தில் இடஅமர்வு செய்வது மற்றும் செயல்திறனை உறுதி செய்யும் வகையில் ஈவி சார்ஜிங் நிலையங்களை நிறுவுவதற்கான விரிவான திட்டத்தை உருவாக்குவது இதில் உள்ளடங்கும். கண்டிப்பான பாதுகாப்பு மற்றும் செயல்திறன் தரநிலைகளை பூர்த்தி செய்யும் வகையில் உயர்தர சார்ஜிங் நிலையங்கள் செர்வோடெக்-ஆல் தயாரிக்கப்படும், பரிசோதிக்கப்படும் மற்றும் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு நிறுவப்படும். கூடுதலாக, தேவைப்படும் அனைத்து மின் இணைப்புகள் மற்றும் பவர் சப்ளை ஏற்பாடுகளை கையாள்வதோடு வாரண்டி ஆதரவையும் செர்வோடெக் வழங்கும். செர்வோடெக் பவர் சிஸ்டம் லிமிடெட்-ன் இயக்குநர் சரிகா பாட்டியா பேசுகையில், "பெஸ்காம்-க்காக இச்செயல்திட்டத்தை மேற்கொள்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். மின்வாகன துறையில் ஒரு முன்னணி நிறுவனமாக, மின்வாகன போக்குவரத்தால் ஆற்றல் பெறும் ஒரு நாடாக மாற வேண்டுமென்ற நமது நாட்டின் ஒட்டுமொத்த இலக்கிற்கு நெருக்கமாக நம்மை இந்த முன்னெடுப்பு நடவடிக்கை அழைத்துச் செல்லும். இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் மற்றும் ஒவ்வொரு பிராந்தியத்திலும் எங்களது பசுமை பாதச்சுவடுகளை நாங்கள் உருவாக்கி வருகிறோம். சமீபத்தில் அனெர்ட் அமைப்புடன் ஒத்துழைப்பில் மேற்கொண்ட நாங்கள் இப்போது பெஸ்காம் உடன் இணைந்து செயல்படுகிறோம். மின்வாகனங்களுக்கான சார்ஜிங் கட்டமைப்பை உருவாக்குவதற்கான எமது பெருவிருப்பம் ஒவ்வொரு நாளும் இதன் மூலம் மேலும் வலுப்பெறுகிறது. பிற ஒருங்கிணைப்பு முகமைகள் மற்றும் மின்விநியோக நிறுவனங்களுடன் (டிஸ்காம்) எதிர்காலத்திலும் ஒத்துழைப்போடு செயல்படுவதன் மூலம் இத்துறையில் எமது செயலிருப்பை நாங்கள் மேலும் உயர்த்த திட்டமிட்டிருக்கிறோம். எமது திறன்மிக்க வன்பொருள் மற்றும் மென்பொருள் தீர்வுகள், நம்பகமான மின்வாகன சார்ஜிங் நிலையங்கள் இயங்குவதை உறுதி செய்யும். நிலைப்புத்தன்மையுள்ள போக்குவரத்து விருப்பத்தேர்வுகளுக்கு வளர்ந்து வரும் தேவைகள் இதன் மூலம் பூர்த்தி செய்யப்படும். விரிவடைந்து வருகிற மின்வாகன வாடிக்கையாளர் அடித்தளத்திற்கு ஆதரவளிக்கவும் மற்றும் அதிக தேவையுள்ள பகுதிகளில் மின்வாகன சார்ஜிங் நிலையங்களின் திறனையும், தரத்தையும் உயர்த்தவும் இச்செயல்திட்டம் சிறப்பான பங்களிப்பை வழங்கும். பகிரப்பட்ட குறிக்கோள் மற்றும் அர்ப்பணிப்புடன் இணைந்து செயல்படும் நாங்கள், நிலைப்புத்தன்மையுள்ள போக்குவரத்து தீர்வுகள் வழியாக பசுமை போக்குவரத்தை நோக்கிய ஒரு நேர்த்தியான நிலைமாற்றத்தை நாங்கள் முன்னெடுத்துச் செல்கிறோம்" என்று கூறினார். இதற்கு முன்னதாக, மின்சார துறையில் இயங்கும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப முகமைக்கு (அனெர்ட்) 12 ஈவி சார்ஜிங் நிலையங்களை நிறுவுவதற்கான ஒரு பெரிய ஒப்பந்தத்தை இந்நிறுவனம் பெற்றிருந்தது. இவ்வொப்பந்தத்தின்கீழ் கேரளா மோட்டார் வாகனத்துறையில் செயல்படும் பல்வேறு அமைவிடங்களில் 30கிவா துரித டி சி ஈவி சார்ஜர்கள் போன்ற 12 மின்வாகன சார்ஜிங் நிலையங்களை செர்வோடெக் நிறுவ வேண்டும். மின்வாகன சார்ஜிங் நிலையங்களை கட்டித்தருவது, அதற்கான சாதனங்களை வழங்குவது மற்றும் அவற்றை செயல்பாட்டிற்கு கொண்டுவருவது ஆகிய பணிகள் இவ்வொப்பந்தத்தின் கீழ் உள்ளடங்கும்.

# மாற்றத்தக்க வாரண்ட்டுகளை எஃப் பி ஐ நார்த் ஸ்டார் ஆப்பர்ச்சுனிட்டீஸ் ஃபண்டு உட்பட பலருக்கும் ஒதுக்கீடு செய்யும் விஷால் ஃபேப்ரிக்ஸ் லிமிடெட்

சென்னை, 22 செப் 2024: உயர்தர ஸ்டிரெட்ச் டெனிம் துணியை தயாரித்து வழங்கும் முன்னணி நிறுவனமான விஷால் ஃபேப்ரிக்ஸ் லிமிடெட், ரூ. 153 கோடி என்ற மொத்த தொகைக்கு புரொமோட்டர் அல்லாத வகையினத்தைச் சேர்ந்த நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் ஒரு வாரண்டுக்கு ரூ. 30.60 என்ற தள விலையில் கட்டாயமாக மாற்றக்கூடிய வாரண்ட்டுகளை தனது இயக்குநர்கள் குழு ஒதுக்கீடு செய்திருப்பதை அறிவித்திருக்கிறது. நார்த் ஸ்டார் ஆப்பர்சூனிட்டிஸ் ஃபண்டு, விசிசி புல் வேல்யு இன்கார்பரேட்டட் விசிசி சப்-ஃபண்டு, எமினென்ஸ் குளோபல் ஃபண்டு பிசிசி - யுபிலியா கேபிட்டல் பார்ட்னர்ஸ் ஃபண்டு போன்ற எஃப்பிஐ நிறுவனங்கள் மற்றும் எலிசியன் வெல்த் ஃபண்டு (முன்பு சில்வர் ஸ்டாலியன் லிமிடெட்) & விகாசா இந்தியா இஐஎஃப் ஐ ஃபண்டு போன்ற பிற பொது வகையின நிறுவனங்களுக்கு இந்த வாரண்ட்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. மேலும், ரூ. 100 கோடி என்ற ஒட்டுமொத்த தொகை வரை ஒப்புதலளிக்கப்பட்ட தகுதிவாய்ந்த நிறுவனங்கள் பிளேஸ்மெண்ட் திட்டத்திற்கும் இயக்குநர்கள் குழு ஒப்புதலளித்திருக்கிறது. ஒரு அல்லது இரண்டு கட்டங்களாக திரட்டப்படும் இந்த நிதி திட்டம், நிறுவனத்தின் பங்குதாரர்களது ஒப்புதல் மற்றும் பொருந்தக்கூடிய ஒழுங்குமுறை அதிகாரி அமைப்புகளின் அனுமதி கிடைக்கப்பெறுவதற்கு உட்பட்டதாகும். 2024 ஜூன் 30 முடிவடைந்த முதல் காலாண்டின்போது சிறப்பான வருவாய் ஈட்டப்பட்டிருப்பதை இந்நிறுவனம் அறிவித்திருந்தது. இயக்க செயல்பாடுகளிலிருந்து ரூ. 33991.60 இலட்சம் என்ற வருவாய் கிடைத்திருந்தது. நிதியாண்டு 24-ன் முதல் காலாண்டில் ரூ. 2080.93 இலட்சமாக இருந்த எபிட்டா 28% வளர்ச்சியுடன் கியூ1எஃப்ஒய்25-ல் ரூ. 2668.71 இலட்சமாக முன்னேற்றம் கண்டிருக்கிறது. அதுபோலவே அதே காலஅளவு ஒப்பீட்டில் வரிக்குப் பிந்தைய இலாபமும் ரூ. 231.86 இலட்சத்திலிருந்து ரூ. 477.83 இலட்சமாக 106% வளர்ச்சியினை பதிவுசெய்திருந்தது.

முன்னதாக, ரூ. 158.02 கோடி என்ற மொத்த தொகைக்கு 2024 மார்ச் 30 அன்று சிரிபால் டெக்ஸ்டைல் மில்ஸ் பிரைவேட் லிமிடெட்-ல் 37.72 சதவீத பங்கினை விஷால் ஃபேப்ரிக்ஸ் வாங்கியிருந்தது (ஒரு பங்கிற்கு ரூ. 135 என்ற விலையில் 1,170,500 பங்குகள்). இந்த கையகப்படுத்தல் நடவடிக்கையானது விஷால் பேப்ரிக்ஸ்-ன் ஒரு இணை நிறுவனமாக சிரிபால் டெக்ஸ்டைல் மில்ஸ்-ஐ மாற்றியிருக்கிறது. 2023 மார்ச் 31-ல் முடிவடைந்த நிதியாண்டில் ரூ. 539.03 கோடி என்ற விற்றுமுதலுடன் பல்வேறு நூல்கள் மற்றும் ஆடைகளின் உற்பத்தியாளர் மற்றும் வர்த்தக நிறுவனமாக சிரிபால் டெக்ஸ்டைல் மில்ஸ் இயங்கி வருகிறது.

# விண்வெளி சூழ்நிலை விழிப்புணர்வுக்காக ஏரிஸ் & பெல் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்







சென்னை, 22 செப் 2024: செயற்கைக்கோள்கள் மற்றும் அவற்றின் பயனர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, விண்வெளி பொருட்களை, குறிப்பாக பூமிக்கு அருகிலுள்ள செயற்கை செயற்கைக்கோள்களை கண்காணிக்க பட செயலாக்க நுட்பங்கள், தரவு பகுப்பாய்வு தீர்வுகளுக்கான மென்பொருள் மற்றும் கருவிகள் மற்றும் ஆய்வகங்கள் விரைவில் உருவாக்கப்படும். இத்தகைய கண்காணிப்பு நடைமுறை விண்வெளி சூழ்நிலை விழிப்புணர்வு (எஸ்எஸ்ஏ) என்று அழைக்கப்படுகிறது.

மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் ஒரு தன்னாட்சி நிறுவனமாக நைனிடாலில் இயங்கும் ஆர்யபட்டா கண்காணிப்பு அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம் (ஏ.ஆர்.இ.எஸ்), விண்வெளி தொழில்நுட்பங்களில் ஒத்துழைக்க நவரத்னா பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனமான பாரத் மின்னணு லிமிடெட் (பி.இ.எல்) உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

'தற்சார்பு இந்தியா' மற்றும் 'மேக்-இன்-இந்தியா' முன்முயற்சிகளுக்கு ஏற்ப, இந்தியாவின் விண்வெளி சூழ்நிலை விழிப்புணர்வு மற்றும் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்துவதில் இது ஒரு குறிப்பிடத்தக்க படியாகும். விண்வெளியில் உள்ள பொருட்களுக்கு இடையிலான சாத்தியமான மோதல்களைக் கணிக்கவும், எச்சரிக்கவும் மற்றும் தவிர்க்கவும் எஸ்எஸ்ஏ தேவைப்படுகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, ஏரிஸ் & பெல் ஆகியவை இந்த நோக்கத்திற்காக அதிநவீன தொலைநோக்கிகளிலிருந்து அவதானிப்புகளைப் பயன்படுத்தும். இரு நிறுவனங்களும் கூட்டாக பட செயலாக்க நுட்பங்கள் மற்றும் தரவு பகுப்பாய்வு தீர்வுகளுக்கான மென்பொருளை உருவாக்கும். கருவிகள் மற்றும் ஆய்வகங்களை உருவாக்குவதிலும் அவர்கள் ஒத்துழைப்பார்கள். அனைவருக்கும் கல்வி இயக்கத்தில் திறன் மேம்பாட்டிற்காக பல்வேறு பயிற்சி பட்டறைகள் நடத்தப்படும். விண்வெளி வானிலையில் தனது நிபுணத்துவத்தையும் ஏரிஸ் பகிர்ந்து கொள்ளும்.

# அனலிடிகா அனகோன், இந்தியா லேப்ஸ் மற்றும் பார்மா ப்ரோ&பேக்கின் மாபெரும் மருந்தக கண்காட்சி




சென்னை, 22 செப் 2024: 2023ம் ஆண்டின் வெற்றிகரமான பாதிப்பை தொடர்ந்து அனலிடிகா அனகோன், இந்தியா லேப்ஸ் மற்றும் பார்மா ப்ரோ&பேக் ஆகிய நிறுவனங்கள் வரும் செப்டம்பர் 26-28 ஆகிய தேதிகளில் ஹைதராபாத்தில் மாபெரும் மருந்தக கண்காட்சியை நடத்தவுள்ளன. 14க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 500க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப விநியோகஸ்தர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். மருந்து, பகுப்பாய்வு, பயோடெக்னாலஜி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு துறைகளுக்கு மாற்றமான அனுபவத்தை உருவாக்கும் வகையில் இந்த நிகழ்வு அமைக்கப்பட்டுள்ளது. அனாலிட்டிகா அனாகான் இந்தியா, இந்தியா லேப் எக்ஸ்போ மற்றும் பார்மா ப்ரோ&பேக் எக்ஸ்போ ஆகியவற்றின் 2024 பதிப்பு, தொழில் வல்லுநர்களை மேம்படுத்தும் வகையில் விரிவான ஆதரவுத் திட்டத்தை வழங்கும்.

முதல் நாள், இந்தியன் அனலிட்டிகல் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் அசோசியேஷன் உடன் இணைந்து அனகான் டெக்னாலஜி ஷோகேஸ் மற்றும் உணவு விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்துடன் இணைந்து இந்தியாவில் உணவு சோதனை ஆய்வகங்களுக்கான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதற்கான அமர்வு ஆகியவற்றைக் கொண்டிருக்கும். இரண்டாவது நாள், இந்திய மருந்துக் கழகத்துடன் இணைந்து தொழில்நுட்ப முன்னேற்றங்கள் குறித்து மாநாடு நடத்தப்படும், மேலும் மூன்றாம் நாள் பார்மா ஸ்டேட் அகாடமியுடன் பார்மா வேர்ல்ட் கேஸ்கான் என்ற மாநாட்டையும், ஆசிய பயோடெக் அசோசியேஷன்களின் கூட்டமைப்பு வழங்கும் தொழில் இணைப்பு அமர்வும் நடைபெறும். இந்த நிகழ்வில் இளம் திறமையாளர்களுக்கு முன்னணி மருந்து நிறுவனங்களுடன் ஈடுபட ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்கும், அடுத்த தலைமுறை தொழில் வல்லுநர்களுக்கு வழி வகுக்கும்.

இது குறித்து மெஸ்ஸே முயென்சென் இந்தியா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி பூபிந்தர் சிங் கூறுகையில், "அனலிட்டிகா அனாகான் இந்தியா, இந்தியா லேப் எக்ஸ்போ மற்றும் பார்மா ப்ரோ&பேக் எக்ஸ்போ ஆகியவற்றின் மிகப் பெரிய பதிப்பை ஹைதராபாத்தில் நாங்கள் வழங்கவுள்ளோம். இந்த நிகழ்வு மருந்து மற்றும் ஆய்வக தொழில்நுட்பத் துறைக்கு கணிசமான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது, ஏனெனில் இது மேம்பட்ட தொழில்நுட்ப தீர்வுகள் மற்றும் உயர்மட்ட விவாதங்களுக்கான ஒரு முக்கிய தளமாக செயல்படுகிறது. தொழில் வல்லுநர்களுக்கு அதிநவீன கண்டுபிடிப்புகளில் ஈடுபடுவதற்கும், அர்த்தமுள்ள கூட்டாண்மைகளை ஊக்குவிப்பதற்கும், ஸ்மார்ட் உற்பத்தி, ஆட்டோமேஷன் மற்றும் ஒழுங்குமுறை இணக்கம் ஆகியவற்றில் சமீபத்திய முன்னேற்றங்களை வெளிப்படுத்துவதன் மூலம் அவர்களின் மூலோபாயக் கண்ணோட்டத்தை மேம்படுத்துவதற்கும் தனித்துவமான வாய்ப்பை வழங்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்." என்று கூறினார்.

இந்த நிகழ்வு அளவு மற்றும் நோக்கத்தில் விரிவடைவதால், இந்தியாவில் மருந்து, உயிர் அறிவியல் மற்றும் ஆய்வக தொழில்நுட்பத் தொழில்களுக்கான முன்னணி வர்த்தக தளமாக அதன் நிலையை உறுதிப்படுத்துகிறது என அனலிடிகா அனகோன் தலைவர் சந்திரஹாஸ் ஷெட்டி மற்றும் 2024 ஆம் ஆண்டு முழுவதும் எங்களின் வெற்றிகரமான சாலைக் காட்சிகள், வரவிருக்கும் நிகழ்விற்கான மகத்தான ஆற்றலையும் உற்சாகத்தையும் வெளிப்படுத்தும் வகையில், இந்த பணிக்கான எங்கள் உறுதிப்பாட்டை மேலும் உறுதிப்படுத்தியுள்ளன என ஐபிஎம்எம்ஏ தலைவர் ஹர்ஷித் ஷா ஆகியோர் கூறினர்.